நடத்திஞேம். Hydro Sulphate, Hydros என்ற பொருள் உடனடியாகத் தேவைப்படக்கூடியது. அதன் பற்ருக்குறை அதிகமாக இருக்கிறது. வெளிநாடுகளில் இரண்டு மூன்று நாடுகளில்தான் அது உற்பத்தியாகிறது. தமிழ் நாட்டில் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க முடிவு செய்தோம். ஒரு கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டுத் தொடங்குவதற்கு முன் அனுமதி பெற்றிருக்கிரேம். அதை எந்த இடத்தில் வைக்கலாம் என்று ஆராயப்பட்டு வருகிறது. அப்படி ஆராய்ந்து தேர்ந்தெடுக்கிற இடத்தில் ஒன்று காரைக்குடிக்கு அருகில் இருக்கிறது. அங்கே தண்ணீர் கிடைக்கிறதா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. பொடாஷியம் குளோரைடு ரசாயனத் தொழிற்சாலே அவசியம். அந்தப் பொருள் தீக்குச்சிக்கு அதிகமாகத் தேவைப்படக் கூடியது. அந்தப் பொருள் ராமஞதபுரம் மாவட்டத்தில் ஏராளமாகத் தேவைப்படுவதால், கூட்டுறவுத் துறையில் அங்கே தொடங்கலாம் என்று முடிவு செய்தோம். அதற்கு இடம் மாஞமதுரைக்கும் திருப்புவனத்திற்கும் பக்கத்தில் உள்ளது. அங்கே தேவையான தண்ணீர் கிடைக்கிறதா என்ற ஆராய்ச்சி இப்போது நடைபெறுகிறது.

Bus accident

*38. *Q.*—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the number of persons (1) dead and (2) injured in the recent bus accident in Kumuzhi-Cumbum Ghat Road on 5-10-1969 ;

(*b*) the amount of financial aid given to each family of the deceased and injured persons ;

(*c*) the amount given as aid by the owners of the bus which was involved in the accident ; and

(*d*) whether the Government have sanctioned any grant to the families of the deceased ?

பஸ் விபத்து

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 5—10—1969-ல் குமிழி-கம்பம் மலேச்சாலேயில் ஏற்பட்ட பஸ் விபத்தில் எத்தனே பேர் (1) இறந்தார்கள் (2) காயமுற்றனர் ?

(இ) இறந்தவர்களின் குடும்பத்தாருக்கும், காயமடைந்தவர்களின் குடும்பத்தாருக்கும் தலா எவ்வளவு நிதி உதவி வழங்கப்பட்டது ?

(உ) விபத்திற்குள்ளான பஸ் உரிமையாளர்கள் எவ்வளவு தொகை உதவியாக அளித்துள்ளார்கள் ?

(எ) அரசாங்கம் இறந்தவர்களின் குடும்பத்திற்கு மான்யம் வழங்கியுள்ளதா ?

28th August 1970]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) 25 பேர் இறந்தனர். 42 பேர் காயமுற்றனர்.

(இ) & (உ) பேருந்தின் உரிமையாளர்களான மதுரை திருவாளர்கள் சதர்ன் ரோட்வேஸ் (தனியார்) நிறுவனத்தினர் விபத்தில் இறந்தவர்கள், காயமுற்றோர் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக மொத்தம் ரூ. 82,872.75 கொடுத்தனர். விபத்தில் காயமுற்றோருக்கும் அவர்தம் உறவினர்களுக்குமான மருத்துவமனைச் செலவுகளையும் அவர்கள் அளித்தனர். சட்டமன்ற மேலவை முன் விவர அறிக்கை (*) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(எ) இல்லை.

திரு. வி. தங்கபாண்டியன் : கம்பம்-குமுளி பக்கத்திலுள்ள மலைப் பகுதியில் அடிக்கடி ஏராளமான பஸ் விபத்துக்கள் நடைபெறுவதால், அதற்குக் காரணம் ஏற்கெனவே போடப்பட்ட பாதை அகலப்படுத்தப் படாததே என்று சொல்லப்படுகிறது. எனவே அந்த மலைப்பாதையைப் போதுமான அளவுக்கு அகலப்படுத்த அரசாங்கம் ஏதேனும் செயற் குறிப்பை வைத்திருக்கிறதா ? அந்த வேலையில் விரைவில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாஷா : அந்தச் சாலையை மேம் படுத்த வேண்டும் என்ற குறிப்பு அரசாங்கத்தால் ஆராயப்பட்டு, அதற்காக 1-7-1970-ஆம் தேதி 5 லட்சத்திற்கு அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : குமுளி, கேரள மாநிலத்தில் இருக்கிறது. 4-40 p.m.
நம்முடைய மாநிலத்தின் எல்லையில் அந்த ஊர் இருக்கிற காரணத்தால், பஸ் டிரைவர்களும் மற்றவர்களும் அங்கே சென்று திரும்புகிறார்கள். மதுவிலக்கு அங்கு அமுலில் இல்லாத காரணத்தால், அங்கே சென்று மது அருந்திவிட்டு பஸ்களை ஓட்டிக் கொண்டு வருவதால், மலைப்பாதையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஒரு வருஷத்திற்குள்ளாக 3, 4 பஸ்கள் கவிழ்ந்திருக்கின்றன. இப்படி ஒவ்வொரு ஆண்டும் 10, 20 பேராவது உயிரிழந்திருக்கிறார்கள். அப்படி விபத்துக்கள் ஏற்படுவதற்கு மது குடிப்பதும்தான் காரணம். மதுவைச் சாப்பிட்டுவிட்டு வரும் டிரைவர்கள் மதியை இழந்துவிடுகிறார்கள். இதற்கு முன்னால் கேரளத்தில் மதுவிலக்கு இல்லாதுபோயினும், கடைகள் இருந்தாலும், அவைகள் தமிழக எல்லையிலிருந்து 5 மைல்கட்கு அப்பால் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. ''இப்போது எல்லையிலேயே மது கிடைப்பதால் எங்கள் டிரைவர்கள் மது அருந்திவிட்டு வந்து பஸ்களை ஓட்டுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன ; எனவே இந்த மதுக் கடைகளையெல்லாம் இந்த 'பெல்ட் ஏரியாவை' விட்டு 5 மைல் தள்ளி, வைக்க வேண்டும்'' என்று கேரள அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் எழுதுமா ?

(*) Printed as Appendix II

[28th August 1970

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாஷா : மது அருந்துவதால் தான் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றால், அந்த மது கிடைக்கும் கடைகள் எல்லையில் இருந்தாலும், எல்லைக்கு தொலைவில் இருந்தாலும் ஏற்படத்தான் செய்யும். ஆனால் குறிப்பிட்ட இந்த விபத்து மது அருந்தியதால் ஏற்பட்டதல்ல. சதர்ன் ரோட்வேஸ் பஸ் ஸுக்கும் 4585 எண்ணுள்ள ஜீப்புக்கும் மோதல் ஏற்பட்டதால், இந்த விபத்து ஏற்பட்டது. 4585 ஜீப் காரின் டிரைவர்தான் குற்றவாளி என்று இலாகாவால் தீர்மானிக்கப்பட்டது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்ன யோசனையில் பொருள் இருக்கிற காரணத்தால், அந்தப் பகுதியிலிருந்து வருகிற டிரைவர்கள் மது அருந்தியிருக்கிறார்களா என்று சோதிக்க, வேறு துறைகள் பல 'செக்-போஸ்ட்' வைத்திருப்பது போல், இதற்கென்று ஒரு போலீஸ் அதிகாரியை நியமித்து அவர்களைச் சோதித்து அதற்குப் பிறகுதான் அவர்கள் லாரிகளையோ, கார்களையோ ஓட்டி வர வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அது போன்றதொரு நிலைமை தேவையில்லை என்று தான் அரசு கருதுகிறது. ஏற்கெனவே நான் இங்கு பதில் சொன்னதைப்போல், இந்த விபத்தில் ஜீப் டிரைவர் மீதுதான் குற்றம் இருக்கிறது என்று இலாகாவால் முடிவு செய்யப் பட்டது. அந்த வழக்கு இப்போது கோர்ட்டில் விசாரணையில் இருக் கிறது. நம்முடைய இலாக்கா சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பொறுத்த வரையில், ஜீப் டிரைவர் மீதுதான் குற்றம் என்று கருதப் படுகிறது.

திரு. எஸ். ராகவானந்தம் : பஸ் டிரைவர்கள் யாரும் 'தண்ணீர் குடித்துவிட்டு' வருவதில்லை. தண்ணீர் என்றால் 'அந்தப்' பொருளில் தானே சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டு தொழி லாளர்கள் மீது சுமத்தப்படுவது சரியல்ல. ஏனென்றால் ஒரு சில பணக்காரப் பிரயாணிகள்தான் 'தண்ணீர்' போட்டுவிட்டு வந்து இடை யில் தகராறு செய்கிறார்கள். அதனால்தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாஷா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிலாளர்களைப் பாராட்டியதற்காக மகிழ்ச்சியடை கிறேன். இதுபோன்ற குற்றங்கள் ஏற்படுவதாக மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே தொழிலாளர் களும் இதில் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : குறிப்பிட்ட விபத்து மது அருந்தியதால் தான் ஏற்பட்டது என்று சொல்ல வரவில்லை. மாநிலத்தின் நன்மையை முன்னிட்டு இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேக்கடிப் பகுதியை நமக்கு லீசுக்கு விட்டிருக்கிறார்கள். அங்கே பெரிய ஏரி இருக்கிறது. டி.பி. இன்ஸ்பெக்ஷன் பங்களா இருக்கிறது.

28th August 1970]

நம்முடைய அதிகாரிகள் அங்கே போய் அடிக்கடி தங்குகிறார்கள். எனவே கேரள எல்லையில் மதுக் கடைகள் இருக்கக்கூடாது என்று கேரள அரசுக்கு நம் மாநில அரசு எடுத்துக் கூறுவதில் தவறு ஏதுமில்லை. அப்படி எழுத நம் அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிச் சில மாநிலங்களுக்கு எழுதி அவர்களும் அதற்கான ஒப்புதலைத் தர மறுத்து வருகிறார்கள்.

திரு. எம். எத்திராஜுலு : தனியார் பஸ்ஸில் ஏற்பட்ட இந்த விபத்திற்காக அதில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு 82,000 ரூபாய் வரை கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி சர்க்கார் பஸ்ஸில் ஏற்படுகிற விபத்துகளில் யாராவது இறந்துவிட்டால், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் ஏதாவது உதவித் தொகை கொடுத்திருக்கிறார்களா ? அப்படிக் கொடுக்க வேண்டும் என்பதற்கான திட்டமாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நிறையக் கொடுத்திருக்கிறோம். ஒரு கேசில் இறந்ததற்காக 80,000 ரூபாய் வரை கொடுத்திருக்கிறோம். அதற்கு அரசாங்கத்தில் விதிமுறை இருக்கிறது. விபத்து ஏற்பட்டால், அது அரசாங்கத் தொழிலாளர் தவறு காரணமாக ஏற்பட்டால், கண்டிப்பாக நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

Manufacture of Sugar from Neera

*39. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether any arrangement has been made for the manufacture of sugar from Neera, under the scheme of Rural Industrial Development ; and

(*b*) if so, in which districts they have been established ?

பதநீரிலிருந்து சர்க்கரை தயாரித்தல்

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பதநீரிலிருந்து சர்க்கரை தயாரிக்க கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த மாவட்டங்களில், அத்தகைய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) ஆம்.

(இ) 1/3 டன் சர்க்கரை ஆலைகளை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி மாவட்டங்களில் தொடங்குவதற்கான செயற்குறிப்பு உள்ளது.